මුදල්, ආර්ථික සහ ප්‍රතිපත්ති සංවර්ධන අමාත්‍යාංශය
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF FINANCE, ECONOMY AND POLICY DEVELOPMENT

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව. | செயலகம், கொழும்பு 01, இலங்கை. | The Secretariat, Colombo 01, Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 2484500, 011 2484600, 011 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 2449823
වෙබ් අඩවිය / இணைய தளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல / My No: TOD/CFM/1/OB/2020
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2020.06.29

திறைசேரி செயற்பாடுகள் சுற்றறிக்கை இல: 01/2020

அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும்
திணைக்களங்களின் தலைவர்கள் யாவருக்கும்,

**<u>நிர்மாணத் துறையிலும் ஏனைய துறைகளிலும் உள்ள அரசாங்கத்தின் ஒப்பந்தக்காரர்களுக்கு/ வழங்குநர்களுக்கு "பொருளாதார மறுமலர்ச்சிக்கான வசதிகளை வழங்குதல்"</u>**

நிர்மாணத் துறையிலும் ஏனைய துறைகளிலும் உள்ள அரசாங்கத்தின் ஒப்பந்தகாரர்களுக்கு/ வழங்குநர்களுக்கு "பொருளாதார மறுமலர்ச்சிக்கான வசதிகளை வழங்குதல்" எனும் தலைப்பில் 2020 ஜுன் மாதம் 03 ஆம் திகதியன்று அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பக்கம் தங்களது கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். அதன் பிரகாரம், ஒப்பந்தக்காரர்களுக்கு/ வழங்குநர்களுக்கு உத்தேச கடன் வசதிகளை துரிதமாக வங்கிகளின் மூலம் பெற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் பின்வரும் படிமுறைகளை பின்பற்றுதல் வேண்டும்.

1. 2020 மே மாதம் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அமைச்சின் திணைக்களத்தின் கணக்கு பிரிவுக்கு அறிக்கையிடப்பட்டுள்ள 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்குரிய சகல நிலுவை விலைப்பட்டியல்களின் அளவை அடையாளங்கண்டு இணைப்பு 1 இலுள்ள மாதிரியின்படி சரியாகப் பூர்த்திசெய்து திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு 2020 ஜுலை மாதம் 06 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறும் pathirana.ppc@tod.treasury.gov.lk முகவரிக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

   மேற்குறிப்பிட்ட விலைப்பட்டியலை அடையாளங்காணும் செயல்முறையின் போது, செலவினை மேற்கொள்கின்ற அலகு (Spending Unit) இதுவரையில் யாரேனும் ஒப்பந்ததாரரின்/ வழங்குநரின் கோரிக்கையின் அடிப்படையில் ஏதேனும் ஒரு வங்கிக்கு விலைப்பட்டியலின் கழிவுக்காக (Discounted bills) உடன்பட்டிருப்பின், அந்த விலைப்பட்டியலின் பெறுமதியை இணைப்பு 1 இல் உள்ளடக்காதிருப்பதற்கு தாங்கள் கவனம் செலுத்துதல் வேண்டும்.

2. திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால் அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட விபரங்களை, இதற்கு முன்னர் திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்டுள்ள நிலுவை விலைப்பட்டியல்களுடன் சீராக்கம் செய்ததன் பின்னர் விடுவிக்கக் கூடிய அதிகபட்ச தொகை பற்றிய உறுதிப்பாட்டை தங்களுக்கு வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்,

3. இந்த கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற தொடர்புடைய ஒப்பந்தக்காரர்கள்/ வழங்குநர்கள், அவர்களால் பெயர் குறிப்பிடப்படுகின்ற ஒரு அனுமதிப்பத்திரம் பெற்ற வணிக வங்கிக்கு மாத்திரம் இந்த மீள்வசதிகள் கடிதத்தை வழங்குதல் வேண்டும். அவ்வாறு பெயர் குறிப்பிடப்படுகின்ற அனுமதிப்பத்திரம் பெற்ற வணிக வங்கிகளுக்கு தொடர்புடைய விலைப்பட்டியலைத் தீர்க்கும் பொருட்டு செலுத்தப்படுகின்ற தொகையை வரவு வைப்பதற்காக மாத்திரம் ஒப்பந்தக்காரரின் வழங்குநரின் பெயரிலான விஷேட கணக்கொன்றை அடையாளங்கண்டு (Designated Bank Account) அந்த கணக்கு இலக்கத்தை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

4. மேலே (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள உறுதிப்படுத்துதலை திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொண்டதன் பின்னர், அவ்வாறு வசதிகளை கோருகின்ற அரசாங்க ஒப்பந்தக்காரர்களுக்கு/ வழங்குநர்களுக்கு வழங்க வேண்டிய "இணைப்பு 2" இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின்படி "நிலுவை விலைப்பட்டியலை உறுதிப்படுத்தும் கடிதத்தை" தயாரித்து தாங்கள்

தனிப்பட்ட முறையில் கையொப்பமிட்டு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு 2020 ஜூலை 31 ஆம் திகதியன்று அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் ஒப்படைத்தல் வேண்டும்.

5. தங்களால் மேலே 4 ஆம் பந்தியின்படி வழங்கப்படுகின்ற கடிதத்தை அடிப்படையாகக்கொண்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு 3 மாதிரியின்படி தயாரிக்கப்பட்ட "நிலுவை விலைப்பட்டியலை தீர்ப்பதனை உறுதிப்படுத்தும் கடிதத்தை" நிதி அமைச்சின் செயலாளரின் கையொப்பத்துடன் தங்களுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அந்த கடிதம் கிடைத்தவுடன் மூலப் பிரதியையும் இரண்டாவது பிரதியையும் ஒப்பந்தக்காரருக்கு/ வழங்குநருக்கு முறையாக ஒப்படைப்பதற்கு தங்களால் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

6. 2020 ஜூலை 31 ஆம் திகதியின் பின்னர் இந்த வசதிகளை பெற்றுக்கொள்வதற்காக ஒப்பந்தக்காரரினால்/ வழங்குனரினால் விடுக்கப்படுகின்ற கோரிக்கைகள் அமைச்சினால்/ திணைக்களத்தினால் பொறுப்பேற்றல் கூடாது.

7. இந்த சுற்றறிக்கையின் "இணைப்பு 1 மற்றும் 2" ஆகியவற்றில் உள்ளடக்க வேண்டிய தேறிய நிலுவை விலைப்பட்டியலின் பெறுமதியை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு கணக்கிடுதல் வேண்டும்.

(ரூபா)

| | | |
|---|---|---|
| தொடர்புடைய அமைச்சினால் திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்ட ஒப்பந்தக்காரருக்கு/ வழங்குநருக்கு 2020.05.31 ஆம் திகதியில் செலுத்த வேண்டியிருந்த நிலுவை விலைப்பட்டியல் பெறுமதி | | XXXX |
| கழித்தல் :-<br>i. 2020.05.31 ஆம் திகதி முதல் இதுவரை தங்களால் தீர்க்கப்பட்ட விலைப்பட்டியலின் பெறுமதி<br>ii. கழிவைப் பெற்றுக்கொள்வதற்காக வங்கியுடன் உடன்பட்டுள்ள விலைப்பட்டியலின் பெறுமதி<br>iii. பெறுமதி சேர் வரி (VAT) மற்றும் ஏனைய மூலங்களில் செலுத்தவேண்டிய அரசாங்கத்தின் வரி, நிறுத்தி வைத்தல் மற்றும் ஏனைய கழித்தல் | XXXX<br>XXXX<br>XXXX | (XXXX) |
| தேறிய நிலுவை விலைப்பட்டியலின் பெறுமதி | | XXXX |

8. தங்களால் அறிக்கையிடப்பட்டுள்ள நிலுவை விலைப்பட்டியலை தீர்ப்பதற்கு தேவையான முற்பணம் திறைசேரியினால் முன்வரும் காலங்களில் அடிக்கடி விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்ற அதேவேளையில், அந்த பணத்தைப் பயன்படுத்தி நிலுவை விலைப்பட்டியலை தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகள் ஒப்பந்தக்காரரினால்/ வழங்குனரினால் பெயர் குறிப்பிடப்பட்ட விசேட வங்கி கணக்கிற்கு மாத்திரம் (Designated Bank Account) அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

9. வெளிநாட்டு கடன் மற்றும் உதவியின் கீழ் தொழிற்படுகின்ற கருத்திட்டங்கள் தொடர்பான நிலுவை விலை பட்டியல்களைத் (நிதியிடல் 17 உட்பட) தீர்ப்பதற்கு இந்த முறைமையை ஏற்புடையதாக ஆக்கிக்கொள்ளுதல் கூடாது.

10. மேலே காட்டப்பட்டுள்ள நடவடிக்கைமுறை பற்றி மேலும் ஏதேனும் விளக்கங்கள் தேவைப்படுமாயின், திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் திரு. ஆர்.எம்.ஏ. ரத்நாயக்க (தொ.பே.இல. 071-8321648) அல்லது மேலதிக பணிப்பாளர் நாயகம் திரு. திலீப் சில்வா (தொ.பே.இல. 071- 4441020) ஆகியோரிடம் பெற்றுக்கொள்ளமுடியும்

எஸ்.ஆர். ஆட்டிக்கல
திறைசேரியின் செயலாளர்

பிரதி;-
1. ஜனாதிபதியின் செயலாளர்
2. இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்
3. கணக்காய்வாளர் அதிபதி
4. பணிப்பாளர் நாயகம், தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்
5. பொது முகாமையாளர், இலங்கை வங்கி
6. பொது முகாமையாளர், மக்கள் வங்கி

அமைச்சின் / திணைக்களத்தின் பெயர் : ……………………………………………………………………………

## 2020 மே 31 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவை விலைப்பட்டடியல் சம்பந்தமான அறிக்கை

| தொடர் இல. | வவுச்சர் இலக்கமும் திகதியும் | வழங்குநரின்/ ஒப்பந்தக்காரரின் பெயர் | 2020 மே 31 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவை விலைப்பட்டியலின் தேறிய பெறுமதி | | | | மொத்தம் (1) + (2) = (3) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | 2019 (1) | | 2020 (2) | | |
| | | | மீண்டுவரும் | மூலதனம் | மீண்டுவரும் | மூலதனம் | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| மொத்தம் | | | | | | | |

மேலே காட்டப்பட்டுள்ள நிலுவை விலைப்பட்டியல் சம்பந்தமான விபரம் சரியானது என்பதை சான்றுப்படுததுகிறேன்.

………………………………………………
பிரதான நிதி உத்தியோகத்தர் / பிரதான கணக்காளர்

……………………………………
செயலாளர்

…………………………… அமைச்சு

திகதி : ………………

இணைப்பு - 2

( உரிய அமைச்சின் கடிதத் தலைப்பு)

திகதி :

செயலாளர்,
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு.

**நிலுவை விலைப்பட்டடியலின் பெறுமதியை உறுதிப்படுத்தும் கடிதம்**

**……………………………........( ஒப்பந்தக்காரரின் பெயர்)**

இந்த அமைச்சுக்கு அறிக்கையிடப்பட்டுள்ளவாறு 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்குரியதாக 2020.05.31 ஆம் திகதியில் உள்ளவாறு மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தக்காரருக்கு ரூபா. ......................................... பெறுமதியான நிலுவை விலைப்பட்டியல் (தேறிய பெறுமதி) செலுத்த வேண்டியிருக்கின்றது என்பதை இதன் மூலம் சான்றுப்படுத்துகிறேன்.

திறைசேரியினால் மேற்குறிப்பிட்ட விலைப்பட்டியலைத் தீர்க்கும் பொருட்டு இந்த அமைச்சுக்கு எதிர்காலத்தில் வழங்கப்படுகின்ற முற்பணத்தைப் பயன்படுத்தி மேற்குறிப்பிட்ட ஒப்பந்தக்காரரின் பெயரில் .................................... ஆம் இலக்கத்தைக் கொண்ட .......................... வங்கியின் ................... கிளையில் பேணப்பட்டுவரும் விசேட வங்கிக் கணக்கிற்கு பணத்தை அனுப்பவதன் மூலம் மேற்குறிப்பிட்ட நிலுவை விலைப்பட்டியலின் பெறுமதியைத் தீர்ப்பதற்கு இத்தால் உடன்படுகிறேன்.

செயலாளர்
................................................ அமைச்சு

(Treasury Letter Head)

Annexure 3

**Draft** Date:

Manager,

……………… (Name of the Bank)

**Letter of Acceptance of the Payment of Outstanding Bills –………………………….(Name of the Contractor/supplier)**

The outstanding dues as at 31 May 2020 from the Ministry/Department of ……………………… to..........................……………………….………(name of the Contractor/ supplier) amounts to Rupees ………………………… (Rs……………………... .00).

This letter of acceptance is issued to confirm that Treasury will provide necessary funds to settle the above mentioned outstanding bill value through the Ministry/Department of ………………………………….… to the designated bank account no ……..……………. of …………………….......................... (name of the contractor/ supplier) maintained at your bank on or before 31.12.2020.

……………………………

Secretary

Ministry of Finance, Economy and Policy Development

Copies: (i). Secretary, Ministry of ………………….

(ii). ………………. (name of the Contractor/ supplier)